Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No.51/2022**

**Deposition of PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :லட்சுமி | ஜாதி | : |
| க/பெ | :முருகன் | தொழில் | :கூலி வேலை |
| கிராமம் | :கோடாங்கிபட்டி | சமயம் | : |
| தாலுகா | :ஆத்தூர் | வயது | : 49/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.08.2023.

(Accused absent. Filed petition U/s.317 Cr.P.C. allowed)

முதல் விசாரணை

நான் கோடாங்கிபட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் விபத்தில் இறந்த நபர் எனது கணவர் ஆவார் அவர் எங்களது வீட்டின் முன்பாக பழக்கடை வைத்திருந்தார். கடந்த 18.12.2021 அன்று மதியம் 1.00 மணியளவில் அவர் கடையில் பழத்தை அடுக்கி வைத்து கொண்டிருந்தார். பழனியில் இருந்து வந்த வேன் எனது கணவரை அடித்துவிட்டது. அதில் அவருக்கு நெஞ்சு, கால், கை, நெற்றியில் அடிபட்டது. வாகனத்தை ஓட்டி வந்தவர் ஆறுமுகத்தேவர் என்பவர் ஆவார். எனது கணவரை உடனே திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு போக்கு ஆட்டோவில் அழைத்து சென்றோம். அங்கு மருத்துவர்கள் பரிசோதனை செய்துவிட்டு எனது கணவர் இறந்துவிட்டதாக சொன்னர் எனது கணவர் இறப்பிற்கு அவர் மீது மோதிய கார் தான் காரணம் ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விாசரணை

சம்பவம் நடைபெற்றபோது நான் எனது கணவர் உடன் தான் இருந்தேன். எனது மகனும் எங்களுடன் தான் இருந்தார் கடையும் வீடும் ஒன்றாகத்தான் உள்ளது. கடைக்கும் வீட்டிற்கும் 4,5 அடி தூரம் இருக்கும். எனது கணவர் இறந்ததற்கு இழப்பீடு கோரி இழப்பீடு மனு தாக்கல் செய்துள்ளோம். எனது மருமகள் வீட்டில் இருந்தார், சமையல் வேலை பார்த்து கொண்டிருந்தார். குடும்பத்தில் உள்ள அனைவரும் விபத்து ஏற்பட்டபோது கடையில் தான் இருந்தோம் நாங்கள் எல்லோரும் கடையில் இருந்த விபரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் தண்ணீர் எடுப்பதற்கு சென்று கொண்டிருந்தேன் அப்போது படப்பட என்று சத்தம் கேட்டவுடன் ஓடி வந்து பார்த்தேன் அப்போது எனது கணவர் அடிபட்டு சைடில் கிடந்தார். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லும் வேனில் 15 பேர் செல்லலாம் என்றால் சரிதான். அந்த வேனில் 15 பேர் செல்லலாம் என்ற விபரம் எனது மகள் மருமகளுக்கு தெரியும், வேனுக்குள் கணவன் மனைவி இரண்டு பேர் இருந்தார்கள் மேலும் ஒரு நபர் இறங்கி ஓடி விட்டார். அவர் ஏன் இறங்கி ஓடினார் என்று தெரியவில்லை. ஆறுமுகத்தேவர் நான் தான் அடித்ததாக சொன்னார். இந்த தகவலை போலீஸ் விசாரணையில்

சொல்லியுள்ளேன். காருக்கும் வேனுக்கும் எனக்கு வித்தியாசம் தெரியும். எனது கணவரை போக்கு வண்டியில் மருத்துமனைக்கு அழைத்து சென்றோம். சொந்த ஆட்டோவில் கொண்டு செல்லவில்லை. இந்த தகவல் எனது மருமகளுக்கு தெரியாது. ஆட்டோவில் எனது கணவரை ஏற்றும்போது எனது மருமகள் அங்கு இல்லை வீட்டிற்குள் இருந்தார். புகாரில் என்ன எழுதி கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. நானும், எனது மகனும் மட்டும் தான் மருத்துவமனைக்கு கணவரை அழைத்து சென்றோம் எனது மருமகள் வரவில்லை. 01.00 மணியளவில் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். 1 மணி என்பது எனக்கு நன்றாக தெரியும். எனது மகன் எனது அக்கா மகனை கூட்டி சென்று புகார் கொடுத்தார் நான் புகார் கொடுக்க செல்லவில்லை. புகார் கொடுக்க பைக்கில் சென்றிருப்பார்கள். சொன்ன மாதிரி சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் விபத்தில் இறந்த நபர் எனது கணவர் என்பதால் எனது மகன் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், ஏதோ ஒரு வாகனம் விபத்து ஏற்படுத்தியதற்கு இழப்பீடு பெறுவதற்காக எதிரியின் மீது புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

P JAISANKAR

Digitally signed by P JAISANKAR

District Munsif Cum Judicial Magistrate,
Athoor